**செய்தி வெளியீடு எண்: 11/12/2020** **நாள்: 31.12.2020**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், பொது மக்களுக்கும் மெட்ரோ இரயிலில் பயணிக்கும் பயணிகளுக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஒரு பகுதியாக, மெட்ரோ இரயிலில் பயணம் செய்வது எவ்வளவு பாதுகாப்பானது என்பதைப் பயணிகளுக்கு தெரிவிக்கும் வகையில் மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நிமிர்வு கலையகம் அமைப்புடன் இணைந்து நாளை 01.01.2021 (வெள்ளிக்கிழமை) மாலை 06:30 மணி முதல் இரவு 08:30 மணி வரை விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) பறையாட்டம் நிகழ்ச்சி நடைபெறுகிறது மற்றும் வருகின்ற 03.01.2021 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 06:30 மணி முதல் இரவு 08:30 மணி வரை திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) பறையாட்டம் நிகழ்ச்சி நடைபெறுகிறது

சென்னை மாநகரில் வசிக்கும் மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகளை கண்டுகளித்து விழிப்புணர்வுடன் இருக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107**